**12 உக்கிர பாண்டியனுக்கு வேல், வளை, செண்டு கொடுத்தப் படலம்**

வேத முறைப் படி உக்ரவர்மனுக்கு தன் மகள் காந்திமதியை தாரைவார்த்துக்கொடுத்தான் மணவூரின் மன்னனான சோமசேகரன்.

சிறிது காலம் சென்றபின் சுந்தரர் உக்ரவர்மரிடம் **வேல், வளை, செண்டு** மூன்றையும் கொடுத்தார். மதுரையை கடல் ஆட்கொள்ளும் சமயம் இந்த வேலை கொண்டுத் தாக்கினால் கடல் உள்ளடங்கும் என்றும், இந்திரன் உக்ரவர்மனிடம் கொண்ட பொறாமையால் இடைஞ்சல் செய்யும் போது வளைக் (சக்கரம்) கொண்டு அவன் மகுடத்தில் தாக்கினால் அவன் அடங்குவான் என்றும், மலையரசன் அகங்காரம் கொண்டு தாக்கும் பொழுது செண்டினால் (கதை) அடிக்குமாறும் கூறினார்.

உக்கிரமனும் தந்தையை வணங்கி மூன்றையும் பெற்றுக் கொண்டான்.

ஓர் நன்னாளில் முடிசூடிய பின்னர் சிவகணங்களுடன் தன் வடிவம் தாங்கி, தடாதகைப் பிராட்டியுடன் திருக்கோயிலுள் சென்று, திருகொலுவீற்றிருந்து அருளினார்.

**பல்லவி**

சோமசேகரன் கனவில் மகள் காந்திமதியை
உக்ரவர்மனுக்கு மணம் செய்திடச் சொன்னாய்

**அனுபல்லவி**

மாமதுரா நகரில் தேவரும் மூவரும்
யாவரும் மகிழ்ந்திட திருமணம் நடந்தது

**சரணம்**

திருமுடியும் உக்ரவரமனுக்குச் சூட்டி கடல்
அரசனையும் இந்திரனையும் எதிர்க்க வேல்வளையம் தந்தாய்
மேருவை எதிர்க்க செண்டும் கொடுத்துப் பின்
திருக்கோயிலினுள் சென்று கொலு வீற்றிருந்தாய்